<u>கரூர் மாநகராட்சி</u>

## 2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 12.00 மணிக்கு கரூர் மாநகராட்சியின் மாமன்ற கூட்ட அரங்கில் அவசரக்கூட்டம் நடைபெறும். அதுசமயம் பின்வரும் பொருள்கள் பற்றி முடிவு செய்யப்படும்.

<u>பொருள்கள்</u>

<u>1. வணக்கத்திற்குரியமேயர் அவர்கள் தாம் முன் மொழிவதாக உள்ள தீர்மானம்.</u>
கரூர் மாநகராட்சிக்குட்பட்டமண்டலம் –2, காமராஜர் மார்க்கெட் வளாகத்தில், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தில் ரூ.675.80 லட்சம் மதிப்பீட்டில் காய்கறி அங்காடிகள் 136 எண்ணம் மற்றும் மளிகை கடைகள் 26 எண்ணம் கட்டப்பட்டு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கடந்த 17.07.2025, 06.08.2025, 29.08.2025, 23.09.2025, 23.10.2025, 13.11.2025, 27.11.2025, 16.12.2025, 06.01.2026 மற்றும் 23.01.2026 ஆகிய தேதிகளில் 10 முறை ஏலம் கோரப்பட்டும், யாரும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர முன் வரவில்லை. எனவே சிறு வியாபாரிகளின் நலன்கருதியும் மாநகராட்சியின் நிதியிழப்பினை தடுக்கும்பொருட்டும், மாநகராட்சியின் துறை ரீதியாக வசூல் நடவடிக்கை மேற்கொள்ள இம்மாமன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மான எண்.2922** வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது

**2.** செயற்பொறியாளர் நீர்வளத்துறை, அமராவதி வடிநில உபகோட்டம் எண்4 கரூர் அவர்களின் கடிதம் எண்.வப/வஅ–1/கோ–3சி/372அ/2025 நாள்.06.11.2025ல் தெரிவித்துள்ளதற்கிணங்க இம்மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் –2ல் உள்ள அரளிக்கொத்து கிளை வாய்க்காலில் தார்சாலை ஆக்கிரமிப்புகளை அகற்றி வாய்க்கால் நீர்வழி பாதைக்கு இடையூறு இல்லா வண்ணம் தங்கள் துறையின் தடையின்மை சான்றில் (கீழ்கண்டவாறு) குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி வாய்க்கால் பாலம் RCC slab culvert அமைக்கும் பணிக்கு ரூ.32.80 இலட்சத்தில் மதிப்பீடுகள் தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோரி அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு தற்போது பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளதால் நீர்வளத் துறையின் மூலம் உரிய அளவீடுகள் சரிபார்த்து கொடுக்கும்படி இவ்வலுவலக கடிதம் நாள்.02.12.2025ன் மூலமாக கேட்டுக் கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| கண்ணறையின் அகலம் | 2.50 மீட்டர் |
| கண்ணறையின் உயரம் | 1.75 மீட்டர் |
| Trough Section - நீளம் | 41.00 மீட்டர் |

அதன்படி 03.12.2025ம் தேதியன்று நீர்வளத் துறையின் உதவி பொறியாளர் அவர்கள் நேரடி ஆய்வு மேற்கொள்ளப்பட்டபோது மேற்படி culvert அமைக்கப்படவுள்ள நீர்வழித் தரைமட்டம் ஆழத்தினை 0.70மீட்டர் அதிகப்படுத்தும் படியும் மற்றும் நெடுஞ்சாலைத்துறையின் Type Design‹ படியும் பணிகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

எனவே, மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் –2ல் உள்ள அரளிக்கொத்து கிளை வாய்க்கால் புல எண்.287ல் பகுதி மற்றும் 372ல் பகுதி நிலங்களில் உள்ள தார்சாலை ஆக்கிரமிப்புகளை அகற்றி வாய்க்காலில் பாசன காலங்களில் பாசன நீர் செல்ல ஏதுவாகவும், மழை காலங்களில் மழை வெள்ள நீர் சென்று வடிய ஏதுவாகவும் மாற்று ஏற்பாடான வாய்க்கால் பாலம் (RCC slab culvert) நீர்வழித் தரைமட்டம் ஆழத்தினை 0.70மீட்டர் அதிகப்படுத்துவதற்கும் மற்றும் நெடுஞ்சாலைத்துறையின் Type Design‹go பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் கூடுதல் செலவினம் ரூ.26.20 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) மாமன்றம் அனுமதிக்கலாம்

2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3) மேற்கண்ட பணிக்கான கூடுதல் செலவினத் தொகையை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/4813/2025)**

**தீர்மான எண்.2923** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**3.** கரூர் மாநகராட்சி மண்டலம்–2, வார்டு எண்.31 பசுபதி லே அவுட், வார்டு எண்.25 காந்தி நகர் மற்றும் வார்டு எண்.30 அண்ணா நகர் ஆகிய பகுதிகளில் உள்ள அங்கன்வாடிகள் பழுது ஏற்பட்டுள்ளது. எனவே அங்கன்வாடியில் பயிலும் குழந்தைகள் நலன் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள கீழ்கண்ட பட்டியலின்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.27.00/– இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.25 காந்தி நகர் பகுதியில் உள்ள அங்கன்வாடி பராமரிப்பு பணி | ரூ.7.00 |
| 2 | வார்டு எண்.30 அண்ணா நகர் பகுதியில் உள்ள அங்கன்வாடி பராமரிப்பு பணி | ரூ.10.00 |
| 3 | வார்டு எண்.31 பசுபதி லே அவுட் பகுதியில் உள்ள அங்கன்வாடி பராமரிப்பு பணி | ரூ.10.00 |
| | **மொத்தம்** | **ரூ.27.00** |

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம் **இ1/326 /2026**

**தீர்மான எண்.2924** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**4.** கரூர் மாநகராட்சி மண்டலம் 1க்குட்பட்ட 1) அரிக்காரம்பாளையம், 2) விவிஜி நகர் மற்றும் 3) அருகம்பாளையம் நுண்ணுயிர் உரக்கிடங்கு மையங்களில் (MCC) Shredding machine பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால், இவற்றை மாற்ற வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே மேற்படி நுண்ணுயிர் உரக்கிடங்கு மையத்தில் (MCC) Shredding machine மாற்றும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.22.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/ 326 /2026)**

**தீர்மான எண்.2925** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**5.** நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.14558/2025/ஞ2 நாள்.19.07.2025ல் நமக்கு நாமே திட்டம் 2025–2026ம் ஆண்டின் கீழ் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட இனாம் கரூர் கிராமம் பெரிய கோதூார் (அரிக்காரம்பாளையம்) புல எண்.473/1**A**ல் ரூ.125.00லட்சம் மதிப்பீட்டில் புதியதாக சமுதாய கூடம் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணியினை மேற்கொள்வதற்கு தலைமை பொறியாளர், நகராட்சி

நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு கடிதம் ந.க.எண்.18484/2023/டிஓ1 நாள்.30.08.2025ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி சமுதாயக் கூடம் கட்டிடம் கட்டும் நுழைவு பகுதியில் சுற்றுச்சுவர் கட்டுவது மிகவும் அவசியமாகிறது.

எனவே மேற்படி சமுதாயக் கூடம் கட்டிடம் கட்டும் நுழைவு வாயில் பகுதியில் சுற்றுச்சுவர் கட்டும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.13.10 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம் **இ1/616/2025**

**தீர்மான எண்.2926** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**6.** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சென்னை அலுவலகத்தில் **24.01.2026**ம் தேதியன்று நடைபெற்ற KFW உதவி SMIF-TN-III-2 ன் திட்ட ஒப்புதலுக்கான குழுக் கூட்ட நடவடிக்கையில் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு பகுதிகளில் புதிய குடிநீர் வழங்கல் மேம்பாட்டு திட்டம் செயல்படுத்துவதற்கு KFW உதவியுடன் SMIF-TN-III-2 ன்கீழ் கீழ்கண்டவாறு ரூ.**245.07** கோடி மதிப்பீட்டிற்கு நிதி பங்களிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **S.No** | **Details** | **Amount (Rs.in crore)** | **Percentage** |
|---|---|---|---|
| 1 | Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) Under Kfw assisted SMIF-TN-III-2 | 85,77 | 35.00% |
| 2 | Grant from Project Sustainability Grand Fund (PSGF) Under Kfw assisted SMIF-TN-III-2 | 85.77 | 35.00% |
| 3 | Grant from CGF | 36.76 | 15.00% |
| 4 | ULB Contribution | 36.77 | 15.00% |
| 5 | Total | 245.07 | 100.00% |
| 6 | Operation & Maintenance cost for 5 years (O&M cost to be met by the ULB from its General funds) | 35.35 | |

மேலும் மேற்படி புதிய குடிநீர் வழங்கல் மேம்பாட்டு திட்டத்தினை **5** ஆண்டு காலம் இயக்குவதற்கும் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.**35.35** கோடி ஆகும். இந்த திட்டத்தில் பின்வரும் கூறுகள் (Components) உள்ளன.

| S.No | Description | Quantity |
|---|---|---|
| 1 | Length of Distribution system | 126 km |
| 2 | No of Collector well at Vangal – 2 Nos | 15.04 MLD |
| 3 | No of Collector well at Kattalai – 1 Nos | 11.79 MLD |
| 4 | No of Sumps/Booster stations (sumps – 2 Nos, Booster station – 3 Nos) | 05 Nos |
| 5 | Length of Pumping mains | 23 km |
| 6 | Length of Feeder mains | 17.2 km |
| 7 | No of Proposed OHTs Capacity (2.5 LL – 2 Nos, 5 LL – 7 Nos, 7.5 LL – 3 Nos, 10 LL – 1 Nos) | 13 Nos |

| | | |
|---|---|---|
| 8 | Estimated House Service Connections (HSC) | 10,588 Nos |
| 9 | Pipe Carrying Bridge | 03 Nos |
| | Lighthouse Components | |
| 10 | No of smart meters | 2194 Nos |
| 11 | Sponge Parks | 02 Nos |

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்படி பணிக்காக மாநகராட்சி பங்களிப்பு தொகையாக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.**36.77** கோடியினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி புதிய குடிநீர் வழங்கல் மேம்பாட்டு திட்டத்தினை **5** ஆண்டு காலம் இயக்குவதற்கும் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு ஆகும் செலவினத் தொகை ரூ.**35.35** கோடியினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ2/6051/2025)**

**தீர்மான எண்.2927** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**7.** அரசாணை எண்.**1** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA**2**) துறை நாள்.**02.01.2026**ன் படியும் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.DMA/30722/2025A&EAP2.நாள்.**24.12.2025**ல் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட தாந்தோணி மற்றும் சணப்பிரட்டி பகுதிகளில் புதியதாக புதைவடிகால் திட்டம் செயல்படுத்துவதற்கும் மற்றும் இனாம் கரூர், கரூர் பகுதிகளில் விடுபட்ட பகுதிகளில் புதை வடிகால் திட்டம் செயல்படுத்துவதற்கு **4**வது PSC கூட்டத்தின்படி முகுறு உதவியுடன் SMIF-TN-III-‹கீழ் ரூ.**485.38** கோடி மதிப்பீட்டிற்கு நிதி பங்களிப்பு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பணியினை மூன்று சிப்பங்களாக பிரித்து ஒப்பந்தப்புள்ளியானது **13.02.2026**ம் தேதியன்று கோரப்பட்டுள்ளது. இப்பணி Project Management Consultancy (PMC) மூலம் கண்காணிக்கப்பட வேண்டியுள்ளது. PMC¡fhd Tender document தயாரித்தல் மற்றும் **3** சிப்பங்களுக்கான மதிப்பீடுகள் (Evaluation) மேற்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளியினை சரிபார்ப்பதற்கும் அனுபவம் மிக்கத் துறை சார்ந்த பொறியாளர்களை நியமிப்பது மிகவும் அவசியமாகிறது.

எனவே, மேற்படி புதைவடிகால் திட்டப் பணிக்கான Tender Evaluation k‰W« PMC-Document preparation பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்சமயம் Consultancy service செய்து வரும் திரு.சி.இளங்கோவன் த/பெ வி.ஜி.சின்னசாமி அவர்கள் மூலம் பணியினை மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச செலவினத் தொகை ரூ.**1.50** இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம் முடிவு செய்யலாம்
2. இப்பணிக்கான உத்தேச செலவினத் தொகையான ரூ.**1.50** இலட்சத்தினை மாநகராட்சி புதை வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ5/6052/2025)**

**தீர்மான எண்.2928** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**8.** கரூர் மாநகராட்சி மண்டலம்–**2** வார்டு எண்.**20** முதல் **27**வரை மற்றும் **30** முதல் **35** ஆகிய வார்டுகளில் உள்ள மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ஜெயப்பிரகாஷ் நடுநிலைப்பள்ளி, குமரன் துவக்கப்பள்ளி, குமரன் மேல்நிலைப்பள்ளி, கோட்டைமேடு நடுநிலைப்பள்ளி, கோட்டைமேடு உயர்நிலைப்பள்ளி, மார்னிங் ஸ்டார் நடுநிலைப்பள்ளி, கொங்கு வெள்ளாளர் மேல்நிலைப்பள்ளி, மாவடியான் பள்ளி, உமையாள் பள்ளி, வாசுகி பள்ளி, தெரசா மேல்நிலைப்பள்ளி, சி.எஸ்.ஐ. ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, சி.எஸ்.ஐ. பெண்கள் மேல்நிலைப்பள்ளி, எல்.என்.வி.என்.துவக்கப்பள்ளி மற்றும் அரசினர் மேல்நிலைப்பள்ளி

ஆகிய பள்ளிகளில் 2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குச்சாவடி மையங்களாக அமைக்கப்பட உள்ளதால், வாக்காளர் மற்றும் வாக்கு சாவடி அலுவலர்களுக்கு தேவையான குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி, பொது சுகாதார வசதி மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.20.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மாமன்றம் அனுமதிக்கலாம்

2.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்

3.மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/6725/2025)**

**தீர்மான எண்.2929** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**9.** கரூர் மாநகராட்சி மண்டலம்–2 வார்டு எண்.23 மற்றும் 24க்குட்பட்ட இரத்தினம் சாலை முதல் வெங்கமேடு இரயில்வே மேம்பாலம் வரை உள்ள இரட்டை வாய்க்காலில் மழைநீர் செல்லாமல் மழைநீர் தேங்கி பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் நிலையில் உள்ளது. எனவே இரத்தினம் சாலை முதல் வெங்கமேடு மேம்பாலம் வரை உள்ள இரட்டை வாய்க்காலில் உள்ள புதர் மற்றும் மண் கழிவுகளையும், ராமகிருஷ்ணா அண்ணாசாலை மழைநீர் வடிகாலில் உள்ள கழிவுகளையும் அகற்றுவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.40 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மாமன்றம் அனுமதிக்கலாம்

2.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்

3.மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/6725/2026)**

**தீர்மான எண்.2930** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**10.** கரூர் மாநகராட்சி மண்டலம்–3 வார்டு எண்.18 சாமிநாதன் நகர் பகுதியில் மழை நீர் வடிகால் இல்லாத காரணத்தினால் மழைநீர் ஆங்காங்கே தேங்கி பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளது. மழைநீர் தேங்குவதால் சுகாதார கேடு ஏற்படும் நிலையில் உள்ளது. எனவே வார்டு எண்.18 சாமிநாதன் நகர் பகுதியில் மழை நீர் வடிகால் அமைக்கும் பணிக்கு முதன்முறையாக 12.12.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ 7.80லட்சம்</u>

1. M/s.CVM & Co, KARUR மதிப்பீட்டைவிட –0.03 %சதம் குறைவு
2. M/s.Thiru.M.Loganathan, Karur மதிப்பீட்டைவிட 1.00 %சதம் அதிகம்

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. CVM & Co, KARUR ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், பணி உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/6723/2025)**

**தீர்மான எண்.2931** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**11.** கரூர் மாநகராட்சி மண்டலம்–4க்குட்பட்ட 36, 37, 43, 44, 45, 46, 47 மற்றும் 48 வார்டு பகுதிகளில் Development charges fund & KNMT திட்டப் பணிகளின் கீழ் மழைநீர் வடிகால் கட்டும் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், குழாய் பகிர்மானக் குழாய்கள் பழுதடைந்து பொதுமக்களுக்கு சீராக குடிநீர் வழங்க இயலவில்லை. எனவே மழைநீர் வடிகால் கட்டும் பகுதிகளில் குடிநீர் பகிர்மானக் குழாய்கள் சுமார் 1.00கி.மீ நீளத்திற்கு பழுதடைய வாய்ப்புள்ளதால், அப்பகுதிகளில் குடிநீர் பகிர்மானக் குழாய்கள் மற்றும் போர்வெல் குழாய்களின் சின்டெக்ஸ்க்கு செல்லும் குழாய்கள் பழுதடைவதால் சுமார் 1.00கி.மீ நீளத்திற்கு 40mm k‰W« 32mm pvc குழாய்களை பதிக்க வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளும் பணிக்கு முதன்முறையாக 23.12.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ 9.80லட்சம்**</u>

1. M/s.Malliga Engineering Contractor, Karur மதிப்பீட்டைவிட –0.02 %சதம் குறைவு
2. M/s.Navaladiyan Electrical & Rewinding Works, Karur மதிப்பீட்டைவிட 0.94 % சதம் அதிகம்

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Malliga Engineering Contractor, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், பணி உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ2/7085/2025)**

**தீர்மான எண்.2932** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**12.** கரூர் மாநகராட்சி மண்டலம்–1, 2, 3 மற்றும் 4க்குட்பட்ட 48 வார்டு பகுதிகளில் பொதுமக்கள் பங்கேற்புடன் வார்டு அளவிலான சபா கூட்டங்கள் நடத்துமாறு அரசாணை (நிலை) எண்.324 நாள்.17.10.2025 அன்று உத்திரவிடப்பட்டது. அதன்படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் 27.10.2025 முதல் 29.10.2025க்குள் அனைத்து வார்டுகளிலும் சிறப்பு கூட்டம் நடத்தி முடிக்குமாறு சுற்றறிக்கை 18.10.2025ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கரூர் மாநகராட்சி மண்டலம்–3க்குட்பட்ட பகுதிகளில் 27.10.2025ம் தேதியன்று நடைபெற்ற வார்டு சிறப்புகூட்டத்தில் ஒவ்வொரு வார்டுளிலும் பொதுமக்களுக்கு மிகவும் அத்தியாவசியமான பணிகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டதின் பேரில் மண்டலம்–3 வார்டு எண்.16 முத்து நகர் 2 மற்றும் 3வது தெருக்களில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு மற்றும் மெயின் லைன் மாற்றி அமைக்கும் பணிக்கு முதன்முறையாக 30.12.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 லட்சம்**</u>

1. M/s.Vishwa Infrastructure, Kanniyakumari மதிப்பீட்டை விட –0.04% சதம் குறைவு
2. M/s.ASV Construction, Trichy மதிப்பீட்டைவிட 23.88% சதம் அதிகம்

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Vishwa Infrastructure, Kanniyakumari ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், பணி உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ2/7824/2025)**

**தீர்மான எண்.2933** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**13.** கரூர் மாநகராட்சி **2024–2025**ம் ஆண்டின்கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆண்டு கணக்குகளான வருவாய் நிதி, குடிநீர் (ம) வடிகால் நிதி மற்றும் கல்வி நிதி ஆகிய மூன்று கணக்குகளை ஒப்பந்தப்புள்ளி மூலம் வெளிக்கொணர்வு (out sourcing) Account Consultant மூலம் முடிக்கப்பட்டு உரிய காலத்திற்குள் தணிக்கை துறைக்கு சமர்பிக்கும் பணியினை மேற்கொள்ள முதன்முறையாக **23.12.2025**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.2.50 லட்சம்</u>

1. Thiru.Tamilarasu, Erode மதிப்பீட்டைவிட **0.20**% சதம் குறைவு
2. Thiru.A.Alagarsamy, Komarapalayam மதிப்பீட்டு விலை விகிதத்தில்

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Thiru.Tamilarasu, Erode ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், வேலை உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம் **பி1/6607/2025**

**தீர்மான எண்.2934** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

<u>**14.**</u> கரூர் மாநகராட்சி மண்டலம்–**4**, வார்டு எண்.**43**க்குட்பட்ட பகுதிகளான வாஞ்சிநாதன் நகர், குறிஞ்சி நகர் மற்றும் வார்டு எண்.**46**க்குட்பட்ட பகுதிகளான பகவதியம்மன் நகர், வையாபுரி நகர் குறுக்கு சாலைகளில், சிமெண்ட் கான்கிரீட் சாலை பழுதடைந்து உள்ளதால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, மேற்கண்ட பகுதிகளிலுள்ள குறுக்கு சாலைகளில் சிமெண்ட் கான்கிரீட் சாலை புதுப்பிக்கும் பணிக்கு முதன்முறையாக **23.12.2025**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ 5.50லட்சம்</u>

1. M/s.SRI KRISHNA TRADERS, KARUR மதிப்பீட்டைவிட **–0.03** %சதம் குறைவு
2. M/s.T.Sundarraj, Karur மதிப்பீட்டைவிட **0.93** % சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.SRI KRISHNA TRADERS, KARUR

ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்

2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், பணி உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/7885/2025)**

**தீர்மான எண்.2935** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**15.** கரூர் மாநகராட்சி மண்டலம்–4 வார்டு எண்.36 திருமாநிலையூர் கிழக்கு தெருவிலுள்ள குறுக்கு சாலைகளில், சிமெண்ட் கான்கிரீட் சாலை பழுதடைந்து உள்ளதால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, மேற்படி திருமாநிலையூர் கிழக்குத் தெருவிலுள்ள குறுக்கு சாலைகளில் சிமெண்ட் கான்கிரீட் சாலை புதுப்பிக்கும் பணிக்கு முதன்முறையாக 23.12.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ 15.00லட்சம்**

1. Thiru.T.Sundarraj, Karur மதிப்பீட்டைவிட –0.03 % சதம் குறைவு
2. Thiru.K.Ramesh, Karur மதிப்பீட்டைவிட 0.95 % சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Thiru.T.Sundarraj, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், பணி உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம் **இ1/7886/2025**

**தீர்மான எண்.2936** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**16.** கரூர் மாநகராட்சி மண்டலம்–1, வார்டு எண்.1ல் உள்ள கோதூர் சாலையில் இருந்து யூனிவர்சல் கார்டன் செல்லும் வழியில் உள்ள குறுக்கு சாலை தற்போதுவரை மண் சாலையாக உள்ளது. அதன்படி இந்த சாலையில் மழை காலங்களில் நீர்தேங்கி இருப்பதால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே மேற்கண்ட பகுதியில் உள்ள மண் சாலையை தார்சாலை மாற்றி அமைக்கும் பணிக்கு முதன்முறையாக 19.12.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ 16.00லட்சம்**

1. M/s.V.POOBATHI & Co, KARUR மதிப்பீட்டைவிட –0.08 % சதம் குறைவு
2. M/s.DRS Construction, Karur மதிப்பீட்டைவிட 4.09 % சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.V.POOBATHI & Co, KARUR ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், பணி உத்திரவு வழங்கியதற்கும்

மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/8258/2025)**

**தீர்மான எண்.2937** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**17.** கரூர் மாநகராட்சி மண்டலம்–1க்குட்பட்ட வார்டு எண்.5 அம்மன் நகர் கிழக்கு பகுதியில் மழைநீர் வடிகால் இல்லாமல் மழைநீர் தெருவில் வழிந்தோடுவதால் பொதுமக்கள் மழைக்காலங்களில் மிகவும் சிரமத்துக்குள்ளாகிறார்கள் மற்றும் 3, 4, 5 மற்றும் 6 வார்டுகளிலிருந்து வரும் மழைநீர் இப்பகுதியின் வழியாக செல்வதால் இச்சாலையில் மழைநீர் வடிகால் அமைப்பது மிகவும் அவசியமாகிறது. எனவே மேற்கண்ட பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை மேற்கொள்ள முதன்முறையாக 12.12.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.15.00 லட்சம்</u>

1. MAHENDRAN R, KARUR மதிப்பீட்டைவிட –0.03% சதம் குறைவு
2. T. Sundarraj, Karur மதிப்பீட்டைவிட 1.00% சதம் அதிகம்

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மேற்படி பணிக்கு இம்மாமன்றம் தீர்மானம் எண்.2611 நாள்.06.08.2025ம் தேதி ரூ.5.00 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள MAHENDRAN R, KARUR ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், பணி உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/4364/20250**

**தீர்மான எண்.2938** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**18.** ரூர் மாநகராட்சி திருமாநிலையூரில் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்தில் உணவகங்கள் மற்றும் கழிப்பிட பயன்பாட்டிற்காக தண்ணீர் அதிக அளவில் தேவைப்படுவதால் புதிதாக ஆழ்குழாய் கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்துதல் மற்றும் ஏலம் விடப்பட்டுள்ள கடைக்காரர்களுக்கான குடிநீர் பயன்பாட்டிற்காக சின்டெக்ஸ் தொட்டிகள் மற்றும் குடிநீர் குழாய்கள் அமைத்தல் பணிக்கு முதன்முறையாக 23.12.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ 15.00லட்சம்</u>

1. M/s.Malliga Engineering Contractor, Karur மதிப்பீட்டைவிட –0.03 % சதம் குறைவு
2. M/s.Navaladiyan Electrical & Rewinding Works, Karur மதிப்பீட்டைவிட 0.99 % சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Malliga Engineering Contractor, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், பணி உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்

3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ2/7390/2025)**

**தீர்மான எண்.2939** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**19.** கரூர் மாநகராட்சி மண்டலம்–1, 2, 3 மற்றும் 4க்குட்பட்ட 48 வார்டு பகுதிகளில் பொதுமக்கள் பங்கேற்புடன் வார்டு அளவிலான சபா கூட்டங்கள் நடத்துமாறு அரசாணை (நிலை) எண்.324 நாள்.17.10.2025 அன்று உத்திரவிடப்பட்டது. அதன்படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் 27.10.2025 முதல் 29.10.2025க்குள் அனைத்து வார்டுகளிலும் சிறப்பு கூட்டம் நடத்தி முடிக்குமாறு சுற்றறிக்கை 18.10.2025ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கரூர் மாநகராட்சி மண்டலம்–2க்குட்பட்ட பகுதிகளில் 27.10.2025ம் தேதியன்று நடைபெற்ற வார்டு சிறப்புகூட்டத்தில் ஒவ்வொரு வார்டுளிலும் பொதுமக்களுக்கு மிகவும் அத்தியாவசியமான பணிகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டதின் பேரில் மண்டலம்–2 வார்டு எண்.22 கலைஞர் நகர் பகுதியில் புதிய போர்வெல் அமைக்கும் பணிக்கு முதன்முறையாக 30.12.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.3.50 லட்சம்</u>

1. M/s.Vishwa Infrastructure, Kanniyakumari மதிப்பீட்டைவிட **–0.06**%சதம் குறைவு
2. M/s.ASV Construction, Trichy மதிப்பீட்டைவிட **10.36**%சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்றம் தீர்மானம் எண்.2866 நாள்.12.12.2025ம் தேதி ரூ.3.50 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Vishwa Infrastructure, Kanniyakumari ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், பணி உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ2/7849/2025)**

**தீர்மான எண்.2940** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**20.** கரூர் மாநகராட்சி மண்டலம்–1, 2, 3 மற்றும் 4க்குட்பட்ட 48 வார்டு பகுதிகளில் பொதுமக்கள் பங்கேற்புடன் வார்டு அளவிலான சபா கூட்டங்கள் நடத்துமாறு அரசாணை (நிலை) எண்.324 நாள்.17.10.2025 அன்று உத்திரவிடப்பட்டது. அதன்படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் 27.10.2025 முதல் 29.10.2025க்குள் அனைத்து வார்டுகளிலும் சிறப்பு கூட்டம் நடத்தி முடிக்குமாறு சுற்றறிக்கை 18.10.2025ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கரூர் மாநகராட்சி மண்டலம்–3க்குட்பட்ட பகுதிகளில் 27.10.2025ம் தேதியன்று நடைபெற்ற வார்டு சிறப்புகூட்டத்தில் ஒவ்வொரு வார்டுளிலும் பொதுமக்களுக்கு மிகவும் அத்தியாவசியமான பணிகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டதின் பேரில் மண்டலம்–3 வார்டு எண்.13 சணப்பிரட்டி பகுதியில் 6 சின்டெக்ஸ் டேங்க் பழுது மற்றும் பராமரிக்கும் பணிக்கு முதன்முறையாக 30.12.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.3.50 லட்சம்</u>

| | |
|---|---|
| **1.** | M/s.Malliga Engineering Contractor, Karur மதிப்பீட்டைவிட **–0.05**%சதம் குறைவு |
| **2.** | M/s.Navaladiyan Electrical & Rewinding works, Karur மதிப்பீட்டைவிட **0.97**% சதம் அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Malliga Engineering Contractor, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், பணி உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம் **( இ2/7824/2025)**

**தீர்மான எண்.2941** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**21.**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–2ல் உள்ள உழவர் சந்தை பகுதியில் இயங்கிவரும் அம்மா உணவகத்திற்கு உணவுகளை விநியோகம் செய்ய இரசீது புத்தகங்கள் தேவைப்படுவதால் **2025/2026**ம் ஆண்டிற்கு இட்லி ரூ.**1/–**க்கு இரசீ எண்.**01** முதல் **3,00,000** வரை, சாம்பார் சாதம் ரூ.**5/–**க்கு இரசீது எண்.**01** முதல் **50,000** வரை மற்றும் தயிர் சாதம் ரூ.**3/–**க்கு இரசீது எண்.**01** முதல் **50,000** வரை ஆக மொத்தம் **4,00,000** இரசீதுகளை அச்சடிக்கும் பணியினை மேற்கொள்ள முதன்முறையாக **10.10.2025**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 லட்சம்</u>

1. THE ERODE DIST PRINTERS INDL CO OP SOCIETY LTD IND 1765, ERODE மதிப்பீட்டைவிட **– 2.33** % சதம் குறைவு

2. M SATHYASEELAN, ERODE மதிப்பீட்டைவிட **–0.39** % சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இம்மாமன்றம் தீர்மானம் எண்.**2637** நாள்.**06.08.2025**ம் தேதி ரூ.**5.00** இலட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள THE ERODE DIST PRINTERS INDL CO OP SOCIETY LTD IND 1765, ERODE ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், பணி உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம் **(அ6/1840/2025)**

**தீர்மான எண்.2942** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**22.** கரூர் மாநகராட்சியில் இயந்திரங்கள் மற்றும் இலகுரக வாகனங்கள் மொத்தம் 43 உள்ளது இதில் நிரந்திர ஓட்டுநர்கள் 13 நபர்கள் தவிர்த்து மீதம் உள்ள 30 வாகனங்களுக்கு ஓட்டுநர் இல்லாத காரணத்தினால் பொது சுகாதார பணிகள் பாதிப்புகள் ஏற்படுவதோடு பொது மக்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களிடமிருந்து புகார் வந்த வண்ணம்இருப்பதினால் வாகனங்களின் அவசரம் அவசியம் கருதி இலகுரக வாகனங்களை இயக்கிட 15 ஓட்டுநர்களும் இயந்திரங்கள், கனரக வாகனங்களை இயக்கிட 6 ஓட்டுநர்களும் ஆக மொத்தம் 21 ஓட்டுநர்களை வெளிகொணர்வு முகமை (Outsourcing) மூலம் 8 மாதத்திற்கு பணியினை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் அவர்களின் செயல்முறை நஇ.எண்.க.1/5246/2025, நாள்.31.05.2025ல் தெரிவித்துள்ள 2025-2026ம் ஆண்டு

விலை விகிதத்தில் தினகூலி நாள் ஒன்றுக்கு கனரக வாகனங்களை இயக்கும் ஓட்டுநர் ரூ.876/- மற்றும் இதரபடிகளான விபரம் பின்வருமாறு.

| வ. எண் | விபரம் | ஒரு நாள் கூலி | பணியாளார் எண்ணிக்கை | மொத்த நாட்கள் | தொகை |
|---|---|---|---|---|---|
| 1) | மாவட்ட ஆட்சியர் விலை விகிதம் 2025-2026 | 876 | 6 | 240 | 12,61,440 |
| 2) | பணியாளரின் பங்களிப்புEPS8.33% EPF 3.67%, Admin Charge ஓப்பந்ததாரரின் பங்களிப்பு 0.5%and EDLI 0.5% Add 13% towards EPF on sub Total basic 15000x13/100=1950/30=65 | 65 | 6 | 240 | 93,600 |
| 3) | ESI3.25% பணியாளரின் பங்களிப்புAdd 3.25% towards ESI 15000x3.25/100=487.50/30=16.25 | 16.25 | 6 | 240 | 23,400 |
| Rate per Workers | | 957,25 | 6 | 30 | 1,72,305 |
| எட்டு மாதத்திற்கு மொத்தம் | | | | | 13,78,440 |

இதர வாகனங்களை இயக்கும் ஓட்டுநர் ரூ.800/- மற்றும் இதரபடிகளான விபரம் பின்வறுமாறு.

| வ.எண் | விபரம் | ஒரு நாள் கூலி | பணியாளார் எண்ணிக்கை | மொத்த நாட்கள் | தொகை |
|---|---|---|---|---|---|
| 1) | மாவட்ட ஆட்சியர் விலை விகிதம் 2025-2026 | 800 | 15 | 240 | 28,80,000 |
| 2) | பணியாளரின் பங்களிப்புEPS8.33% EPF 3.67%, Admin Charge ஓப்பந்ததாரரின் பங்களிப்பு 0.5%and EDLI 0.5% Add 13% towards EPF on sub Total basic 15000x13/100=1950/30=65 | 65 | 15 | 240 | 2,34,000 |
| 3) | ESI3.25% பணியாளரின் பங்களிப்பு Add 3.25% towards ESI 15000x3.25/100=487.50/30=16.25 | 16.25 | 15 | 240 | 58,500 |
| Rate per Workers | | 881.25 | 15 | 30 | 3,96,563 |
| எட்டு மாதத்திற்கு மொத்தம் | | | | | 31,72,500 |

எனவே மேற்கண்டபணிக்கு 8 மாதத்திற்கு ஆகும் உத்தேசசெலவினத் தொகை ரூ.47.00 இலட்சத்தில் புதிய ஒப்பந்தபுள்ளி கோரிபணிகள் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு**

1.மாமன்றம் அனுமதிக்கலாம்.

3.மேற்படி செலவினத்தை மாநகராட்சி பொதுநிதி மற்றும் திடக்கழிவு பயணர் கட்டணத்திலிருந்து மேற்கொள்ளவும் இம்மாமன்றம் அனுமதிக்கலாம். ( 000139/2026/எச்1)

**தீர்மான எண்.2943** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**23.** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**16**ல் வடக்கு காந்திகிராமம் அன்பு நகர் பகுதியில் நியாயவிலைக் கடை அமைக்க சட்டமன்ற உறுப்பினர் கோரியுள்ளார். எனவே அப்பகுதியில் உள்ள பயன்பாட்டில் இல்லாத பழைய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியினை அப்புறப்படுத்தி நியாயவிலைக் கடை அமைக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட தொட்டியினை இடித்து அப்புறப்படுத்தும் பணியினை மேற்கொள்ள முதன்முறையாக **12.12.2025**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.1.00 லட்சம்**

1. M/S CVM & Co, KARUR மதிப்பீட்டைவிட **0.07**%சதம் குறைவு
2. Thiru.M.Loganathan, Karur மதிப்பீட்டைவிட **1.37**%சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்றம் தீர்மானம் எண்.**2560** நாள்.**06.08.2025**ம் தேதி ரூ.**1.00** இலட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S CVM & Co, KARUR ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், பணி உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/4369/2025)**

**தீர்மான எண்.2944** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**24.** கரூர் மாநகராட்சி மண்டலம் **–1** வார்டு எண்.**11** பாலம்மாள்புரம் கழிவுநீர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள **150** எச்.பி மோட்டார் பழுதடைந்து இயக்கமுடியாத நிலையில் உள்ளது. அதனால் கழிவு நீர் மோட்டார் இயக்க முடியாமல் கழிவு நீர் தேங்கும் நிலை உள்ளது. எனவே பாலம்மாள்புரம் கழிவுநீர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள **150** எச்.பி மோட்டார் சரி செய்யும் பணிக்கு முதன்முறையாக **19.12.2025**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ 12.50லட்சம்**

1. M/s.TamilNadu Water Supply & Drainage System மதிப்பீட்டைவிட **–0.10** % சதம் குறைவு
2. M/s.JPC Namakkal, Namakkal மதிப்பீட்டைவிட **0.15** % சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.TamilNadu Water Supply & Drainage System ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், பணி உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ2/6475/2025)**

**தீர்மான எண்.2945** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**25.** கரூர் மாநகராட்சி மண்டலம் 3க்குட்பட்ட சுகாதாரப் பிரிவு வார்டு அலுவலகம் 6, 7 மற்றும் 8ல் உள்ள நுண்ணுயிர் உரக்கிடங்கு மையத்தில் (MCC) Pulverizer blade, Gear wheel, Belt, Gear oil, Gear Box போன்றவை பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால், இவற்றை மாற்ற வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே மேற்படி நுண்ணுயிர் உரக்கிடங்கு மையத்தில் (MCC) Pulverizer blade, Gear wheel, Belt, Gear oil, Gear Box போன்றவற்றை மாற்றும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.8.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/ 326 /2026)**

**தீர்மான எண்.2946** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**26.** கரூர் மாநகராட்சி மண்டலம்–1, 2, 3 மற்றும் 4 ஆகிய மண்டலங்களுக்குட்பட்ட 48 வார்டு பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள 1708 சென்டர் மீடியன் விளக்குகளில் தற்போது பழுதடைந்துள்ள 438 சென்டர் மீடியன் விளக்குகளுக்கு தேவைப்படும் 120 வாட்ஸ் னுசளைந 500 எண்ணிக்கை மற்றும் 120 வாட்ஸ் LED Dislay Unit 200 எண்ணிக்கை சப்ளை செய்து பொருத்தும் பணிகளை செய்து முடிக்க ரூ.8.50 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7)ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | M/s.Star Engineering, Tricy | 2.78% அதிகம் |
| 2 | M/s Vignesh Electricals, Trichy | 0.00% குறைவு |
| 3 | M/s.Sri Power Enterprises, Thanjavur | 4.41% அதிகம் |

அலுவலக குறிப்பு:

1) மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7)ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s Vignesh Electricals, Trichy அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்த செலவினத் தொகை ரூ.8.50 இலட்சத்திற்கு மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **இ1/3610/2025**

**தீர்மான எண்.2947** பதிவு செய்யப்பட்டது

**<u>27.</u>** கரூர் மாநகராட்சி மண்டலம்–2 வார்டு எண்.27 முத்து நகர், திண்ணப்பா தியேட்டர் அருகில் புதைவடிகால் மெயின் லைன் பழுது ஏற்பட்டு கழிவுநீர் செல்லாமல் பொதுமக்களுக்கு மிகவும் பாதிப்பு ஏற்படும் நிலையில் உள்ளது. எனவே மேற்படி பகுதியில் புதைவடிகால் மெயின் லைன் மனித ஆய்வுக் குழி எண் வரை 250அஅ பைப் லைன்களாக மாற்றுவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.30 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்

2.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்

3.மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை மாநகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். <u>இ5/7463 /2025</u>

**தீர்மான எண்.2948** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**28.** சட்டமன்ற தேர்தல் 2026ல் நடைபெற இருப்பதால் கரூர் மாநகராட்சி மண்டலம்–3க்குட்பட்ட வார்டு எண்.12–19 மற்றும் 38–42 வார்டு பகுதிகளில் உள்ள வாக்குச்சாவடி மையங்களில் குடிநீர் வசதி, மின்வசதிகள் செய்தல், சாமியானா பந்தல் அமைத்தல், சி.சி.டிவி கேமராக்கல் அமைத்தல், கதவுகள், ஜன்னல்களை சரி செய்தல், பெயிண்டிங் பணிகள் செய்தல், ரேம்ப (Ramp) வசதிகள் செய்தல் போன்ற இதர பணிகளை முன்கூட்டியே செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.16.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3) மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/ 4398/2025)**

**தீர்மான எண்.2949** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**29.** கரூர் மாநகராட்சி பகுதியில் நமக்கு நாமே திட்டம் 2025–26ம் ஆண்டின்கீழ் மண்டலம்–3 வார்டு எண்.17 மற்றும் 41ல் உள்ள பொதுமக்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் பயன்பெறும் வகையில் ரூ.125.00/– இலட்சம் மதிப்பீட்டில் (துலா ஒன்றிற்கு) புதியதாக திறன்மேம்பாட்டு மையம் மற்றும் வார்டு எண்.18ல் முதியோர்கள் தங்குவதற்கு அரசால் பராமரிக்கப்படும் முதியோர் இல்லம் இல்லாத காரணத்தினால் ரூ.300.00/– இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக முதியோர் இல்லம் கட்டும் பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கான வரைபடங்கள் மற்றும் Structural design¡F Vetting report கள் தயார் செய்து அறிக்கை சமர்பிக்குமாறு முதல்வர், அரசு பொறியியல் கல்லூரி, கரூப்பூர், சேலம் அவர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அதனை தொடர்ந்து மேற்படி மூன்று பணிகளுக்கான வரைபடங்கள் மற்றும் Structural design¡F Vetting reportகள் தயார் செய்து அறிக்கை சமர்பிக்க கட்டணம் ரூ.1,06,200/–ஐ செலுத்துமாறு முதல்வர், அரசு பொறியியல் கல்லூரி அவர்களின் கடிதம் எண். GCE/SEM/CIVIL/SDC/Consultancy/2026Date.22.01.2026 தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, கரூர் மாநகராட்சி பகுதியில் நமக்கு நாமே திட்டம் 2025–26ம் ஆண்டின்கீழ் மண்டலம்–3 வார்டு எண்.17 மற்றும் 41ல் உள்ள பொதுமக்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் பயன்பெறும் வகையில் ரூ.125.00/– இலட்சம் மதிப்பீட்டில் (துலா ஒன்றிற்கு) புதியதாக திறன்மேம்பாட்டு மையம் மற்றும் வார்டு எண்.18ல் முதியோர்கள் தங்குவதற்கு அரசால் பராமரிக்கப்படும் முதியோர்

இல்லம் இல்லாத காரணத்தினால் ரூ.300.00/— இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக முதியோர் இல்லம் கட்டும் பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கான வரைபடங்கள் மற்றும் Structural design¡F Vetting reportகள் தயார் செய்து அறிக்கை சமர்பிக்க ஆகும் கட்டணம் ரூ.1,06,200/—ஐ முதல்வர், அரசு பொறியியல் கல்லூரி, கருப்பூர், சேலம் அவர்களுக்கு செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **இ1/3604/2025**

**தீர்மான எண்.2950** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**30.** கரூர் மாநகராட்சி பகுதியில் நமக்கு நாமே திட்டம் 2025—26ம் ஆண்டின்கீழ் மண்டலம்—3 வார்டு எண்.17 மற்றும் 41ல் உள்ள பொதுமக்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் பயன்பெறும் வகையில் ரூ.125.00/— இலட்சம் மதிப்பீட்டில் (தலா ஒன்றிற்கு) புதியதாக திறன்மேம்பாட்டு மையம் மற்றும் வார்டு எண்.18ல் முதியோர்கள் தங்குவதற்கு அரசால் பராமரிக்கப்படும் முதியோர் இல்லம் இல்லாத காரணத்தினால் ரூ.300.00/— இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக முதியோர் இல்லம் கட்டும் பணிக்கு Soil test report, Plan for building construction, DTCP approval process, Structural design works, 3D design work பெறுவதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/3604/2025)**

**தீர்மான எண்.2951** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**31. State Urban Infrastructure Development Fund (SUIDF)** 2022—2023ஆம் ஆண்டின் கீழ் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் —1, 2, 3 மற்றும் 4 ஆகிய மண்டலங்களுக்குட்பட்ட வார்டு பகுதிகளில் ஏற்கனவே பொருத்தப்பட்டுள்ள 8849 இதர தெரு மின் விளக்குகளை எல்.இ.டி விளக்குகளாக மாற்றும் பணிக்கு ரூ.946.70 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.31595/2022/ஙக்ஷ, நாள். 04.11.2022ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை மேற்கொள்ள முதன் முறையாக 23.12.2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிஅளித்துள்ள M/s.Balajee Electricals, Trichy அவர்களுக்கு 06.02.2023ல் பணிஉத்திரவு வழங்கப்பட்டு 95ரூ பணிகள் முடிவுற்றுள்ளது. மேற்கண்ட பணிகள் தொடர்பாக அரசாணை எண்.145, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (எம்.ஏ 2) நாள்.14.10.2022ல் இப்பணியினை எடுத்துள்ள ஒப்பந்ததாரர் மூலமாக ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள மின் விளக்குகளையும், புதியதாக நிறுவப்படவுள்ள மின் விளக்குகளையும் 10 ஆண்டுகள் இயக்கவும், பராமரிக்கும் பணிகளையும் மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பணிகளின் ஒப்பந்தவிதிகளில் ஓராண்டுக்கு பின்பு ஒவ்வொரு ஆண்டும் இயக்கவும், பராமரிக்கும் பணிகளை மேற்கொள்ள ஆகும் ஒரு வருடத் தொகையில் 5ரூ தொகை கூடுதலாக வழங்கப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள மின்விளக்குகளையும், புதியதாக நிறுவப்படவுள்ள மின்விளக்குகளையும் ஒப்பந்தப்புள்ளி நமுனாவில் தெரிவித்துள்ளபடி இப்பணியினை மேற்கொண்ட M/s.Balajee Electricals, Trichy அவர்களின் மூலம் டிசம்பர் 2023முதல் மார்ச் 2026வரை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு மாமன்ற தீர்மானம் எண்.2179 நாள்.28.02.2025ல் அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் ஏப்ரல் 2025முதல் மார்ச் 2026வரை மேலும் ஒராண்டுகளுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு மாமன்ற தீர்மானம் எண்.2401 நாள்.12.05.2025ல் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே, அரசாணை எண்.145, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (எம்.ஏ.2) நாள்.14.10.2022ன்படி இப்பணியினை எடுத்துள்ள ஒப்பந்ததாரர் மூலமாக ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள மின்

விளக்குகளையும், புதியதாக நிறுவப்படவுள்ள மின் விளக்குகளையும் ஏப்ரல் **2026** முதல் மார்ச் **2027** வரை மேலும் ஒரு ஆண்டுகளுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை M/s.Balajee Electricals, Trichy அவர்களின் மூலமாக மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச செலவினத் தொகை ரூ.**80.00** இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்கண்ட பணிக்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.**80.00** இலட்சத்தினை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ3/6910/2022)**

**தீர்மான எண்.2952** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**32.**இம்மாநகராட்சிகுட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரிந்த **1,636** எண்ணிக்கையில்லான சமுதாய நாய்களுக்கு டிசம்பர் **2025** முதல் ஜனவரி **2026** வரை காலத்தில், வெறிநோய் தாக்கத்திலிருந்து காக்கும் பொருட்டு, அவற்றை பிடித்து வெறிநாய்கடி தடுப்பூசி செலுத்தப்பட்டதுள்ளதற்கான ஒரு சமுதாய நாய்க்கு ரூ.17x1636= ரூ,**27,812**யை அரசுக்கணக்கில் செலுத்தக்கோரி மண்டல இணை இயக்குநர் கால்நடை பராமரிப்புத்துறை, கரூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.**674/2025/**இ நாள். **27.01.2026**ல் தெரிவித்துள்ளார்.எனவே மேற்குறிப்பட்ட1636 டோஸ்கள் தடுப்பூசி மருந்துகளுக்கான தொகை ரூ.**27.812**யை கால்நடை பராமரிப்பு துறைக்கு செலுத்த மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக்குறிப்பு</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காணும் செலவினத் தொகை ரூ.**27.812** யை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(எச்1/5956/2006)**

**தீர்மான எண்.2953** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**33.** கரூர் மாநகராட்சி மண்டலம் **2**க்குட்பட்ட சுகாதாரப் பிரிவு வார்டு அலுவலகம் **3, 4** மற்றும் **5**ல் உள்ள நுண்ணுயிர் உரக்கிடங்கு மையத்தில் (MCC) Pulverizer blade, Gear wheel, Belt, Gear oil, Gear Box போன்றவை பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால், இவற்றை மாற்ற வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே மேற்படி நுண்ணுயிர் உரக்கிடங்கு மையத்தில் (MCC) Pulverizer blade, Gear wheel, Belt, Gear oil, Gear Box போன்றவற்றை மாற்றும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**24.00** இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1.மாமன்றம் அனுமதிக்கலாம்

2.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

3.மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/ 326 /2026)**

**தீர்மான எண்.2954** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**34.** கரூர் மாநகராட்சிக்குட்பட் மண்டலம் **–2** வார்டு எண்.**34** ஆதிகிருஷ்ணபுரம் சாலையில் உள்ள புதை வடிகால் மனித ஆய்வுக்குழி எண்.N4- CD17 முதல் NI (S) 46க்கிடையே உள்ள **250** மி.மி விட்டமுள்ள ஆர்.சி.சி குழாய் அரிப்பு ஏற்பட்டுள்ளது. மற்றும் வார்டு எண்.**35** வஞ்சியம்மன் கோவில்

நடுபகுதியில் மனித ஆய்வுக்குழி எண் N4- 7 முதல் N4- 8 இடையே உள்ள 250 மி.மீ ஆர்.சி.சி குழாய் அரிப்பு ஏற்பட்டு குழாய் பழுதடைந்துள்ள குழாய்களை பொது சுகாதார நலன் கருதி மாற்றியமைக்கும் பணிக்கு மாநகராட்சிகளின் சட்டம் 1920, பிரிவு 15ன் கீழ் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Sunmathi Construction, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ. 11.00 இலட்சத்தை மாநகராட்சி வடிகால் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வா. எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை சதவிகிதத்தில். |
|---|---|---|
| 1 | M/s.Sunmathi Construction, Karur | 0.12% Less |
| 2 | M/s.P.K.Builders, Karur | 1.23% above |
| 3 | Thiru.G. Nandhakumar, Karur | 2.94% above |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகளின் சட்டம் 1920, பிரிவு 15ன் கீழ் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s.Sunmathi Construction, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ. 11,00,000 /-ஐ மாநகராட்சி வடிகால் நிதியில் செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி அளிக்கலாம். **(இ5/9388/2023)**

**தீர்மான எண்.2955** பதிவு செய்யப்பட்டது

